# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:

தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டுக்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2022 நவெம்பரில் சுருக்கமடைந்து காணப்பட்டன.

**தயாரிப்பு நடவடிக்கைகளில் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் பின்னடைவினை எடுத்துக்காட்டி, தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2022 நவெம்பரில் 42.1 கொண்ட சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.** நிரம்பலர் விநியோக நேரத்திற்கானவை தவிர, அனைத்து துணைச் சுட்டெண்களிலும் அவதானிக்கப்பட்ட குறைவடைந்த செயலாற்றம் இப்பின்னடைவிற்கு பங்களித்திருந்தது.

குறைவடைந்த கேள்வி நிலைமைகளின் பிரதான காரணமாக, குறிப்பாக உணவு மற்றும் குடிபானங்கள், மற்றும் புடவைகள் மற்றும் அணியும் ஆடைத் துறைகளின் தயாரித்தலில் புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பன நவெம்பரில் சுருக்கமடைந்து காணப்பட்டன. நுகர்வோரின் கொள்வனவு சக்தி சீர்குலைந்தமை கேள்வியில் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது என உணவு மற்றும் குடிபானத் துறையினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். அதேவேளை, முக்கிய ஏற்றுமதி நாடுகளில் பொருளாதார மெதுவடைதல் மற்றும் கடுமையான போட்டிக்கு மத்தியில் வேறு நாடுகளுக்கு கொள்வனவுக் கட்டளைகள் நகர்ந்தமை என்பன காரணமாக கேள்வி குறைவடைந்தன என ஏற்றுமதியை நோக்காகக்கொண்ட தயாரிப்பாளர்கள் குறிப்பாக புடவை மற்றும் அணியும் ஆடைத் துறையைச் சார்ந்தவர்கள் எடுத்துக்காட்டினர். இவற்றுக்கு மத்தியில், வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை காரணமாக தேவையான மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வது சில தயாரிப்பாளர்களுக்கு சிக்கலொன்றாகவிருந்தது. மேலும், புதிய கட்டளைகளிலும் உற்பத்தியிலும் வீழ்ச்சிக்கும் அமைமைவாக, தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பன வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 நவெம்பரில் நிரம்பலர் விநியோக நேரம் நீட்சியடைந்தது.

| மாறி | ஒத் | நவெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **38.4** | **42.1** | **+** | **வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு. துணைச் சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 33.0 | 38.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 32.5 | 35.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 47.0 | 48.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 35.9 | 43.9 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 49.0 | 52.5 | + | சுருக்கத்திலிருந்து நீட்சியடைகின்றது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பொருளாதார நிலைமையில் மேம்பாடுகளை எதிர்பார்த்து அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் 2022 நவெம்பரில் மேம்பாடொன்றினைக் காண்பித்தது.

**தயாரிப்பு**
**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**42.1**

2022 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 3.7 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் ஒத்தோபரில் 0.6 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2022 நவெம்பரில் 48.8 பெறுமதியினைப் பதிவுசெய்தது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 நவெம்பரில் இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் உயர்வான வேகத்தில் மேம்பட்ட அதேவேளை, சிங்கப்பூரில் இது மெதுவான வீதத்தில் அதிகரித்துள்ளது. எனினும், யூரோவலயம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 நவெம்பரில் சீர்குலைந்தது.

---

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2022 திசெம்பர் 14இல் உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் 30இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கும் யூரோ வலயம் உள்ளடங்கலாக முக்கிய பிராந்தியங்களுக்கும் கொ.மு.சுட்டெண்ணை தொகுக்கின்றது.*

**பணிகள் கொ.மு.சுட்டெண்ணானது ஒத்தோபரின் 47.9 சுட்டெண் பெறுமதியிலிருந்து உயர்வடைந்து 2022 நவெம்பரில் 49.0 பெறுமதியினைப் பதிவுசெய்தது, இருந்தும் நடுநிலையான அடிப்படை மட்டத்திற்கு சற்றுக் கீழேயே காணப்பட்டது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் பணிகள் நடவடிக்கைகளில் வீழ்ச்சி வீதம் தளர்வடைந்தது. எவ்வாறாயினும், தொழில்நிலை மற்றும் நிலுவையிலுள்ள பணிகள் மாதகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

குறிப்பாக, சில நிதியியல் பணிகள், காப்புறுதி மற்றும் ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுடன் புதிய வியாபாரங்கள், 2022 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 2022 நவெம்பரில் மேம்பட்டன.

ஏதிர்வரவுள்ள பண்டிகைப் பருவகாலம் காரணமாக பணிகள் துறையிலுள்ள தொழில் நடவடிக்கைகள் 2022 நவெம்பரில் தொடர்ந்தும் அதன் அதிகரித்த போக்கினை முன்னெடுத்தன. அதற்கமைய, ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள், நிதியியல் பணிகள் மற்றும் தொலைத்தொடர்பு துணைத் துறைகளுடன் தொடர்புடைய தொழில் நடவடிக்கைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மேம்பாடுகளைக் காண்பித்தன. மேலும், சுற்றுலாப் பயணி வருகைகளில் அதிகரிப்பிற்கு இணையாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபானத் துணைத் துறை தொழில் நடவடிக்கைகளும் அதிகரித்தன. எனினும், தொடர்ச்சியான வாழ்க்கைச் செலவு சவால்களுக்கு மத்தியில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்துடன் தொடர்புடைய தொழில் நடவடிக்கைகள் மாதகாலப்பகுதியில் மேலும் வீழ்ச்சியடைந்தன.

பல்வேறு கம்பனிகளில் சில ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்ற போதிலும், அதிகரிக்கின்ற பதவி விலகல்கள், புலம்பெயர்தல்கள் மற்றும் ஓய்வுபெறுதல்கள் காரணமாக தொழில்நிலை நவெம்பரில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, மாத காலப்பகுதியில் நிலுவையிலுள்ள பணிகள் விரைவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தன.

| மாறி | ஒத் | நவெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **47.9** | **49.0** | **+** | **வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில்** |
| | **கொ.மு.சு துணைச் சுட்டெண்கள்** | | | |
| புதிய வியாபாரங்கள் | 49.0 | 53.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில் நடவடிக்கை | 54.2 | 53.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 33.9 | 37.4 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 44.6 | 41.8 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 57.9 | 59.2 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், விசேடமாக பண்டிகைப் பருவகாலம் மற்றும் பொருளாதார நிலைமைகளில் மேம்படுத்தல்கள் பற்றிய சாதகமான எண்ணப்பாங்கு என்பவற்றுடன் மேலும் மேம்பட்டன.

**பணிகள் கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**49.0**

2022 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 1.1 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு., 2022 ஒத்தோபரின் 49.2 இலிருந்து 2022 நவெம்பரில் 48.1 இனைப் பதிவுசெய்து, உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளின் வீழ்ச்சியினை சமிஞ்சைப்படுத்தியது.

இந்தியா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 நவெம்பரில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தன எனக் காண்பித்த அதேவேளை சீனா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் இச்சுட்டெண் அவற்றின் பணிகள் நடடிவக்கைகளில் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2022 திசெம்பர் 14இல் உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.